අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/04/59/04/05/22

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2026.07.

நே.ப.இல: ......... ச.இல: ........

வண/ திரு/ திருமதி/ செல்வி .....................................................

.......................................................

.......................................................

**<u>இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் கீழ் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தல்</u>**

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக 2021.11.28 ஆந் திகதி நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்குப் ஆட்சேர்ப்பதற்காக நடத்தப்படவுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பரிசீலிக்கும் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு தாங்கள் தகைமை பெற்றுள்ளீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

02. குறித்த நேர்முகப் பரீட்சைக்காக பத்தரமுல்ல, பெலவத்த, "இசுருபாய", கல்வி அமைச்சின் 07 ஆம் மாடியில் உள்ள கேட்போர் கூடத்திற்கு **2026.08.11** ஆந் திகதி மு.ப. 7.00 மணிக்கு சமூகமளிக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

03. அன்றைய தினம், பின்வரும் தலைப்பு I இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களினதும் மூலப் பிரதிகளைக் கொண்ட கோவை ஒன்றையும், குறித்த ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட நகல் பிரதிகளை உள்ளடக்கிய அதற்கு இணையான மற்றுமொரு கோவை ஒன்றைத் தனியாகவும் தயாரித்து, மேலே குறிப்பிடப்பட்டுள்ள நேர்முகப் பரீட்சை இலக்கம் மற்றும் சபை இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு நேர்முகப் பரீட்சைச் சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனைத்துச் சான்றிதழ்கள்/ஆவணப் பிரதிகளின் மீதும் அவை உண்மைப் பிரதிகள் என உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரரினாலும் அது தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்

I. பொது நேர்முகப் பரீட்சை

i. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம்
ii. தேசிய அடையாள அட்டை
iii. பிறப்புச் சான்றிதழ்
iv. வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட, பூர்த்தி செய்யப்பட்ட, உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட இணைப்பு 02 மாதிரிப் படிவம்

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com

v. கல்விச் சான்றிதழ்கள் - க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த. உயர் தரம், எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களுக்குரியதான பட்டச் சான்றிதழ்கள் மற்றும் விவரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணங்கள், பட்டப் பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ், ஆட்சேர்ப்புக்கான தகைமைகளுக்குரிய ஏனைய சான்றிதழ்கள்

vi. இக்கடிதத்தின் 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப் படிப்பின் உள்ளடக்கத்தில் 1/3 பகுதியானது விண்ணப்பித்த பாடத்திற்குரியது என்பதை உறுதிப்படுத்தும் கடிதம்

vii. சத்தியக்கடதாசி (தேவைப்படின்) - உரிய கல்விச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய சான்றிதழ்கள்/ஆவணங்களில் உள்ள பெயர்களில் மாற்றங்கள் காணப்படின், அதற்குரிய சத்தியக்கடதாசி சமர்ப்பிக்கப்பட வேண்டும்

viii. அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் (03 மாதங்களுக்குள்)

ix. அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைச்சான்றிதழ் (சமாதான நீதவான் ஒருவரிடமிருந்து)

04. அடிப்படைத் தகைமைகளைப் பரிசீலிக்கும் பொது நேர்முகப் பரீட்சையின் போது மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்கள் பரிசீலிக்கப்பட்டு, ஆட்சேர்ப்புக்கான **அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமை உறுதிப்படுத்தப்படும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே** தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எனவே, 2020.02.07 ஆந் திகதியிட்ட 2,162 ஆம் இலக்க இலங்கைச் ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு அறிவித்தல், அதன் திருத்தங்கள் மற்றும் தங்களது விண்ணப்பப் படிவத்தின்படி அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்துச் சான்றிதழ்கள்/ஆவணங்கள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நகல் பிரதிகளை அன்றைய தினம் நேர்முகப் பரீட்சைச் சபையிடம் சமர்ப்பிப்பது கட்டாயமானது என்பதுடன், பின்னர் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள்/ஆவணங்கள் எவையும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது என்பதை அறியத்தருகின்றேன்.

05. உரிய பட்டச் சான்றிதழ்களின் விவரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணங்கள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், பின்னர் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

06. விண்ணப்பித்துள்ள பாடத்துறையினை பட்டப் பாடநெறியில் ஒரு பிரதானமான பாடமாகக் கற்றுள்ளார் என்பதையும் பட்டப் பாடநெறின் மொத்தப் பாட அலகுகளில் (கிரெடிட்) குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பகுதியாவது விண்ணப்பித்துள்ள பாடத்திற்குரிய பாடங்கள் என்பதையும் உறுதிப்படுத்தக்கூடிய சான்றிதழ்கள்/ஆவணங்கள் மற்றும் அவ் விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக உரிய பல்கலைக்கழகப் பதிவாளரினால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல் சான்றிதழ் (www.moe.gov.lk உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள இணைப்பு 01 படிவத்திற்கு அமைவாக) நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

07. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்களின் அடிப்படையிலானது எனின், குறித்த பல்கலைக்கழகமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனம் என்பதாக அந்த ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கடிதம் ஒன்று நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பின்னர் சமர்ப்பிக்கப்படும் அத்தகைய கடிதங்கள் மீண்டும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

08. அறிவித்தலின் இலக்கம் 04.I இன் கீழ் i, ii மற்றும் iii உப இலக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுத் தகைமைகள் மற்றும் இலக்கம் 04.III இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுபவம் என்பன விண்ணப்பதாரர்களினால் உரிய திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை உரிய திணைக்களத் தலைவரான வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதிப்படுத்த வேண்டும். (இணைப்பு 02 படிவத்திற்கு அமைவாக)

09. குறைந்தபட்சத் தகைமைகளின் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள், உரிய பாடத்துறையில் கற்பித்தல் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக இணைப்பு 03 படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் உரிய பாடசாலைகளின் அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட ஆசிரியர் கால அட்டவணைகளை சமர்ப்பித்தல் வேண்டும். (இணைப்பு 03 படிவத்திற்கு அமைவாக)

10. உரிய அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பப் படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

11. எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றிய அதே மொழி மூலத்திலேயே நேர்முகப் பரீட்சைக்கும் தோற்ற வேண்டும் என்பதுடன், உரிய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை விண்ணப்பிக்கும் மொழி மூலத்திலேயே பெற்றிருப்பது கட்டாயமானதல்ல.

12 . இந்நேர்முகப் பரீட்சைக்காக வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கு விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவதனால், இந்நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது மாத்திரமே இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கான நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு தகைமை அல்ல என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன்.

13. மேலும், இக்கடிதம் கிடைத்தவுடன் வார நாட்களின் அலுவலக நேரத்தின் போது 0112-787083 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொண்டு கடிதம் கிடைத்தமையை உறுதிப்படுத்துமாறு மேலதிகமாக அறியத்தருகின்றேன்.

ஒப்பம்/- நாலக களுவெவ
செயலாளர்
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

எஸ். டபிள்யூ. சித்ரா ரோஹிணி
சிரேஷ்ட உதவிச் செயலாளர் (ஆசிரியர் கல்வியியலாளர்)